அலகு

1

# தமிழகப் பண்பாடு– ஓர் அறிமுகம்

AATM2P

## கற்றல் நோக்கங்கள்

- பண்பாடு என்ற சொல்லின் பொருள் அறிதல்.
- தமிழரின் தொன்மை மற்றும் மாண்புகளை அறிதல்.
- தமிழ் வளர்த்த முச்சங்கங்கள் பற்றித் தெரிந்து கொள்ளுதல்.
- தமிழரின் அகப்புறவாழ்க்கை முறையை அறிதல்.
- பண்டைய தமிழகத்தின் நிலவியல் பகுப்பு முறைகளைத் தெரிந்து கொள்ளுதல்.

### நுழைவு வாயில்

பண்டைய தமிழர், பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கினர். அவர்கள், தனிமனித வாழ்விலும் சமுதாய வாழ்விலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து மேன்மை பெற்றிருந்தனர் என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம்.

இப்பகுதியில் வெளிநாட்டவரின் குறிப்புகள், தொல்பொருள் சான்றுகள், கல்வெட்டுச் செய்திகள், நாணயங்கள், பட்டயங்கள் ஆகியவற்றின் வாயிலாகத் தமிழகப் பண்பாட்டின் தொன்மையை அறியலாம். மேலும், தமிழர்களின் அகவாழ்வு, புறவாழ்வு பற்றிய செய்திகளும் விளக்கப்படுகின்றன.

சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களின் ஒருமித்த நடத்தைகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துவது பண்பாடு ஆகும். பண்பாடு என்பது, குறிப்பிட்ட ஒரு நிலப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையாகும். ஒவ்வொரு மனித சமுதாயத்திற்கும் ஒரு பண்பாடு உண்டு. எனவே, நமது பண்பாட்டின் தொன்மையையும் சிறப்பையும் அறிந்து கொள்வது இன்றியமையாததாகும்.

### பண்பாடு – சொற்பொருள் விளக்கம்

பண்படு' என்னும் வேர்ச்சொல்லிலிருந்து தோன்றியதே பண்பாடு ஆகும். பண்படு என்பதற்குச் சீர்படுத்துதல், செம்மைப்படுத்துதல் என்பது பொருள். பண்பாடு என்ற சொல்லைத் தமிழில் முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் டி.கே. சிதம்பரநாதனார். உழவன், பயிர் செழிக்க நிலத்தைப் பண்படுத்துதல்போல, மனிதவாழ்வு செழிக்க உயர்ந்த எண்ணங்களால் மனத்தைச் செம்மைப்படுத்த வேண்டும்.

'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே' என்கிறது தொல்காப்பியம். இங்கு, 'உயர்ந்தோர்' என்பது பண்பாடு உடையவர்களையே குறிக்கிறது. நல்ல வழிமுறைகளைப் பின்பற்றி வாழ்வதே சிறந்தது என்பதைப் 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்று கலித்தொகை குறிப்பிடுகிறது. இவ்வுலகம், பண்புடையவர்களால் மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதைப் 'பண்புஉடையார்ப் பட்டுஉண்டு உலகம்' என்கிறார் வள்ளுவர். இதன்மூலம், மனிதனை மேம்படுத்துகின்ற அன்பு, ஈகை, புகழ், பெரியோரைத் துணைக் கொள்ளல், மனிதநேயம் போன்ற உயரிய பண்புகளை மக்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பது



Unit 1.indd 1 20-02-2020 16:40:35

புலனாகிறது. எனவே, மனிதன் பேசும் மொழி, உணவு, உடை, வாழ்க்கை முறை, செய்யும் தொழில், எண்ணங்கள் ஆகியவை பண்பாட்டை வெளிப்படுத்தும் காரணிகளாகத் திகழ்கின்றன.

தமிழர் பண்பாடு தமிழ் மொழியின் வழியாகவும், தாயகப் பிணைப்பின் வழியாகவும், தமிழர் மரபுகள், வரலாறு, விழுமியங்கள், கலைகள் ஊடாகவும், சமூக, பொருளாதார, அரசியல் தளங்கள் ஊடாகவும் பேணப்படும் தனித்துவப் பண்பாட்டுக் கூறுகளைக் குறிக்கும்.

தமிழர் பண்பாடு பல காலமாகப் பேணப்பட்டு, திருத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட கூறுகளைக் குறித்து நின்றாலும், அது தொடர் மாற்றத்துக்கு உட்பட்டு நிற்கும் ஓர் இயங்கியல் பண்பாடே ஆகும்.

| பண்பாடு (Culture) | நாகரிகம் (Civilisation) |
|---|---|
| பண்பாடு என்பது, மாந்தனது அகவுணர்வு வளர்ச்சியையும் சீர்மையையும் குறிப்பது | நாகரிகம் என்பது, மாந்தனது புறத்தோற்ற வளர்ச்சியின் செம்மையைக் குறிப்பது |
| மாந்தன் தன் அறிவுத்திறத்தாலும், உள்ளுணர்வுத் திறத்தாலும் உள்ளத்தைப் பண்படுத்திப் பண்படுத்தி அன்புடையவன் – அருளுடையவன் – ஈகையுடையவன் – இரக்கமுடையவன் – பண்புடையவன் – பக்குவமுடையவன் – வீரமுடையவன் – தீரமுடையவன் – ஊக்கமுடையவன் – உணர்வு உடையவன் – மானமுடையவன் – மரியாதையுடையவன் – பற்றுடையவன் – பணிவுடையவன் – தன்னலங்கருதாதவன் – பிறர் நலம் பேணுபவன் – உடைமையை, உடலை, உயிரை ஈபவன் என்ற வகையில் பெயரெடுப்பது, அகத்தோற்றப் பொலிவை உணர்த்தும் பண்பாட்டின்பாற்பட்டதாகும். நாகரிக வளர்ச்சிக்குப் பண்பாடு துணைபுரியும்; அதுபோலவே பண்பாட்டுவளர்ச்சிக்கு நாகரிகம் உறுதுணையாக இருக்கும். | மாந்தன் தன் அறிவுத்திறனாலும் ஆற்றல் திறனாலும், உள்ளுணர்வுத் திறனாலும் பேணப்பட்டு வளர்ந்து வருவன சுவையான உணவு – அழகான உடை – வசதியான உறையுள் – வாய்ப்பான போக்குவரத்துப்பொறிகள் – வளம் மிகுந்த நாடு – நலம் மிகுந்த நகரங்கள் – கல்விச்சாலைகள் – கலைக் கூடங்கள் – இசை – கூத்து – நாடகம் – நாட்டியம் – ஓவியம் – சிற்பம் – விளையாட்டு – வளர்ந்து நிற்கும் வாணிகம் – சிறந்து செயல்படும் தொழிற்சாலைகள் – அழகான சாலை – வனப்பான பூஞ்சோலை போன்றவையெல்லாம் மாந்தனது புறத்தோற்றப் பொலிவுகளைக் குறிக்கும் நாகரிகத்தின் பாற்பட்டவையாகும். |

## தமிழர்களின் தோற்றம்

தமிழர் தோற்றம் பற்றி நான்கு வகையான கருதுகோள்கள் உள்ளன. தமிழர் குமரிக்கண்டத்தில் வாழ்ந்து வந்தார்கள் என்பது ஒரு கருதுகோள். தென் இந்தியாவின் பழங்குடிகள் என்பது இரண்டாவது கருதுகோள். ஆதியில் ஆப்பிரிக்காவில் இருந்து அரேபிய கடல் வழியாகத் தென் இந்தியா வந்தோரின் வழித்தோன்றல்கள் என்கிறது மூன்றாவது கருதுகோள். மத்திய ஆசியா, வட இந்தியா நிலப்பரப்புகளில் இருந்து காலப்போக்கில் தென் இந்தியா வந்தனர் என்பது நான்காவது கருதுகோள். எப்படி இருப்பினும், தமிழினம் தொன்மை வாய்ந்த மக்கள் இனங்களில் ஒன்று. எனவே, தமிழர்கள் கலை, நம்பிக்கை, பழக்க வழக்கங்கள், மொழி, விழுமியங்கள் முதலான பண்பாட்டுக் கூறுகளைத் தொன்றுதொட்டு பெற்றிருந்தனர்.

## தொன்மையை வெளிப்படுத்தும் சான்றுகள்

தமிழர்கள், தொன்றுதொட்டுப் பண்பாட்டில் சிறந்து விளங்கினர் என்பதற்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன. அவற்றை இலக்கியச்சான்றுகள், வெளிநாட்டவரின் குறிப்புகள், தொல்பொருள் சான்றுகள் என வகைப்படுத்தலாம்.



Unit 1.indd 2 20-02-2020 16:40:35

## இலக்கியச் சான்றுகள்

தமிழகப் பண்பாட்டின் தொன்மையை அறிந்துகொள்வதற்குப் பெரிதும் துணை புரிபவை இலக்கண நூலாகிய தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களுமாகும். தொல்காப்பியப் பொருளதிகாரம் பழந்தமிழரின் அக, புற வாழ்க்கை முறைகளைப் பற்றிக் கூறுகிறது. சங்க இலக்கிய நூல்களாகிய எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் அக்கால மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

சங்க இலக்கியங்கள் அக வாழ்க்கையைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என 'அன்பின் ஐந்திணையாகப்' பகுத்துள்ளன. இதன் மூலமாக நிலம், பொழுது ஆகியவை முதற்பொருளாகவும், வழிபடு தெய்வம், வழிபாட்டுமுறைகள், வாழ்க்கைமுறை, விளையும் பொருள்கள் ஆகியவை கருப்பொருளாகவும், காதல் வாழ்வு, அதன் வழியாகத்தோன்றும் பல்வேறு உணர்வு நிலைகள் ஆகியவை உரிப்பொருளாகவும் பாகுபடுத்தி விளக்கப்பட்டுள்ளன.



**ஐவகை நிலங்கள்**

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உயரிய தத்துவத்தை உலகிற்கு எடுத்துக் கூறிய பெருமை, சங்ககாலப் புலவராகிய கணியன் பூங்குன்றனாரைச் சாரும்.

சேர மன்னர்களின் வணிகமுறை, ஆட்சிச்சிறப்பு, போர்த்திறம், கொடைத்திறம் முதலானவற்றைப் பற்றிப் பதிற்றுப்பத்து விரிவாக விளக்குகிறது. இசைப்பாடலாகிய பரிபாடல், பாண்டியர்களின் தலைநகரமாகிய மதுரையின் சிறப்பையும், வையை ஆற்றின் சிறப்பையும், திருமால், முருகன் போன்ற தெய்வங்களை வழிபட்ட முறைகளையும் பாடுகிறது.

பத்துப்பாட்டில் ஐந்து நூல்கள் ஆற்றுப்படை நூல்களாகும். ஆற்றுப்படை நூல்களுக்கு இலக்கணமாக,

"ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன்எதிரச் சொன்ன பக்கமும்"
(தொல். பொருள். புறத்திணையியல் 30)

என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் தம்மைப் போன்று வறுமையில் வாடும் பிறரும் வளம் பெற்று வாழ்வதற்கான வழிமுறைகளைக் கூறுகின்ற பெருமனம் படைத்தவர்களாகப் புலவர்கள் திகழ்ந்துள்ளார்கள் என்பதை ஆற்றுப்படை நூல்கள் புலப்படுத்துகின்றன. குறிஞ்சிப்பாட்டும் முல்லைப்பாட்டும் நிலவளம், காதலின் சிறப்பு ஆகியவற்றைப் பற்றிப் பேசுகின்றன. நெடுநல்வாடை காதலையும், வீரத்தையும் ஒருசேரப் பேசுகிறது. மதுரைக்காஞ்சி, பாண்டியன் நெடுஞ்செழியனின் சிறப்பைக் கூறுகிறது. அதில் கூறப்பட்டுள்ள நிலையாமை குறித்த கருத்துகள்கூட, பாண்டிய மன்னன், காலத்தால் ஆற்ற வேண்டிய கடமைகளின் நினைவூட்டலாகவே அமைந்துள்ளன. சோழநாடு, தரைவழி வணிகத்தாலும் கடல் வழி வணிகத்தாலும் வளம் பெற்றிருந்ததனை 'முட்டாச் சிறப்பின் பட்டினம்' என்று பட்டினப்பாலைச் சொற்றொடர் குறிப்பிட்டுச் சொல்கிறது.

இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம், தமிழர் ஆட்சிமுறை, ஆடல், பாடல், கலைவளம் மற்றும் புகார், மதுரை, வஞ்சி ஆகிய தலைநகரங்களின் சிறப்புகள், வணிகச்சிறப்பு, சமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், தனிமனித ஒழுக்கம், நீதி வழங்கும் முறைமை ஆகியவை பற்றி விரிவாகப்பேசும் வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது.

மணிமேகலை, சமய அறக் கருத்துகளையும் வாழ்வியல் நெறிகளையும்

எடுத்துரைக்கின்றது. பல்வேறு குற்றங்களுக்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்வதன் மூலமே குற்றச்செயல்களைத் தடுத்து நிறுத்தமுடியும் என்பது, மணிமேகலையின் மையக் கருத்தாகும். பசியைப் பிணியாக உருவகம் செய்து, அதைப் போக்கவேண்டிய அவசியத்தையும் கூறுகின்ற புரட்சிக்காப்பியம் மணிமேகலையாகும்.

### வெளிநாட்டினரின் குறிப்புகள்

தமிழகத்தில் வணிகம் செய்ய வந்த வெளிநாட்டவரான யவனர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், புனிதப்பயணம் மேற்கொண்டவர்கள் போன்ற வர்களின் குறிப்புகளில், தமிழகம் பிற நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்பினை அறிய முடிகிறது.

- பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட 'எரித்திரியக் கடலின் பெரிபுளூஸ்' என்னும் நூலின் பதிப்புரையில், கிரேக்க மக்கள் நாகரிக சமூகத்தில் அடியெடுத்து வைப்பதற்கு முன்பே, எகிப்தும் பண்டைய இந்தியாவும் நெடுங்காலமாக வணிகத் தொடர்பு கொண்டிருந்தன எனக் கூறப்பட்டுள்ளது.
- ரோமாபுரி அரசன் அகஸ்டஸின் சமகாலத்தவரான ஸ்டிராபோ (Strabo) என்பவர் எழுதிய 'பூகோள நூல்', பிளினி எழுதிய உயிரியல் நூல், தாலமி எழுதிய பூகோள நூல் ஆகியவை பண்டைய தமிழகத்தின் கடல் வணிகம் பற்றிக் குறிப்பிடுகின்றன.
- சேரநாட்டுத் துறைமுகங்கள் அனைத்தும் கண்ணனூருக்கும் கொச்சிக்கும் இடையில் அமைந்திருந்தன. அரேபியாவிலிருந்தும், கிரேக்கத்திலிருந்தும் வணிகப் பொருள்களை ஏற்றிக்கொண்டு வந்த எண்ணற்ற நாவாய்கள் முசிறியில் செறிந்து கிடந்தனவென்று பெரிபுளூஸ் என்ற நூல் கூறுகின்றது.
- கி.மு.(பொ.ஆ.மு) ஐந்தாம் நூற்றாண்டு முதல் கிரேக்கர்கள், தமிழகத்துடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். இதனால் பல தமிழ்ச்சொற்கள் கிரேக்க மொழியில் இடம் பெற்றிருந்தன.
- 'அரிசி' என்னும் தமிழ்ச்சொல் கிரேக்க மொழியில் 'அரிஸா' என்றும், கருவா (இலவங்கம்) என்னும் தமிழ்ச்சொல் 'கார்ப்பியன்' என்றும், இஞ்சிவேர் சின்ஞிபேராஸ் என்றும், பிப்பாலி பெர்ப்பெரியாகவும் உருமாற்றம் அடைந்தன.
- சாலமன் மன்னனுக்கு அளிக்கப்பெற்ற துகிம் (மயில்தோகை), ஆல்மக் (அகில் மரங்கள்), பிற மதிப்புயர்ந்த பொருள்களின் பெயர்கள் அனைத்தும் தமிழ்ப்பெயர்களின் சிதைவுகளே என்பதில் ஐயமில்லை.
- தமிழகத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குப் பலவகையான நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியாயின.
- அயல்நாடுகளுக்குப் புலி, சிறுத்தை, யானை, குரங்கு, மயில், கிளி, வேட்டைநாய்கள் ஆகியவற்றைத் தமிழகம் ஏற்றுமதி செய்தது. அவற்றுள், தமிழகத்து வேட்டைநாய்கள், தரத்தில் மேலானவை எனப் போற்றப்பட்டன.
- சேரநாட்டுத் துறைமுகப் பட்டினங்களான தொண்டியைத் 'திண்டிஸ்' என்றும், முசிறியை 'முஸிரிஸ்' என்றும், பொற்காட்டைப் 'பகரி' என்றும், குமரியைக் 'கொமாரி' என்றும் ரோமர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
- தமிழகத்தின் கீழைக்கடற்கரைத் துறைமுகங்களான கொற்கையைக் 'கொல்சாய்' என்றும், நாகப்பட்டினத்தை 'நிகாமா' என்றும், காவிரிப்பூம்பட்டினத்தைக் 'கமாரா' என்றும், புதுச்சேரியைப் 'பொதுகே' என்றும், மரக்காணத்தைச் 'சோபட்மா' என்றும், மசூலிப்பட்டினத்தை 'மசோலியா' என்றும் அந்நூல்கள் குறிப்பிடுகின்றன.
- ஹிப்பாகிரேட்டஸ் என்ற புகழ் பெற்ற கிரேக்க மருத்துவர் கி.மு. (பொ.ஆ.மு.) ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் இந்திய மருத்துவ முறைகளையும், மருந்து வகைகளையும் கையாண்டு வந்தார். இவர் மிளகை 'இந்திய மருந்து' என்றே குறிப்பிட்டுள்ளார்.



Unit 1.indd 4 20-02-2020 16:40:35

- பண்டைய தமிழகத்திலிருந்து மஸ்லின் துணியும், ஏலக்காய், இலவங்கம் போன்ற நறுமணப் பொருள்களும் ஏற்றுமதியாயின.

தமிழகம் அயல்நாடுகளுடன் மேற்கொண்டிருந்த வணிக உறவானது தமிழரின் நாகரிகம், பண்பாடு, கலை ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உதவின.

## தொல்பொருள் சான்றுகள்

தமிழக வரலாற்றை அறிய தொல்பொருள் ஆய்வுகள் மூலம் கிடைத்துள்ள பொருள்கள் பெரிதும் துணைபுரிகின்றன. அவை, மூன்று வகைப்படும்.


- கல்வெட்டுகளும் பட்டயங்களும்
- நாணயங்கள்
- நினைவுச்சின்னங்கள்

## கல்வெட்டுகளும் பட்டயங்களும்

பண்டைய தமிழகத்தின் கோயில்களில் உள்ள கற்சுவர்கள், கோயில் மண்டபத்துக் கற்றூண்கள் போன்றவற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளை எழுத்துருக்களாகப் பொறித்து வைத்துள்ளனர். இவற்றையே கல்வெட்டு என்பர். பெரும்பாலும் மன்னர்களின் ஆணைகள், அவர்களின் சாதனைகள் போன்றவை கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளன.

திருப்பரங்குன்றம், நாகமலை, ஆனைமலை, கீழக்குயில்குடி ஆகிய இடங்களில் காணப்படும் கல்வெட்டுகள் சங்க காலத்தவை என குறிப்பிடப்படுகின்றது.

பல்லவர்காலக் கல்வெட்டுகள் குகைகள், இரதங்கள், கோயில்கள், கற்பாறைகள், தூண்கள் ஆகியவற்றில் காணப்படுகின்றன. இவற்றில் மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, திருச்சி, பல்லாவரம், மாமல்லபுரம், தளவானூர் போன்ற இடங்களில் கிடைத்துள்ளவைக் குறிப்பிடத்தக்கன. காஞ்சி கோயில்களில் காணப்படும் கல்வெட்டுகளில், பல்லவர்கால வரலாற்றை அறியமுடிகிறது.



சோழர் காலக் கல்வெட்டு

பராந்தகச் சோழனின் உத்திரமேரூர்க் கல்வெட்டு, சோழர்கால கிராம ஆட்சிமுறையைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இக்கல்வெட்டில் கிராம உறுப்பினர்களின் தகுதிகள், தேர்ந்தெடுக்கப்படும்முறை ஆகியவை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. தஞ்சை, திருவொற்றியூர், மேலப்பழுவூர், சிதம்பரம், திருவாரூர், மதுரை, கன்னியாகுமரி போன்ற இடங்களில் காணப்படும் கோயில்களிலுள்ள கல்வெட்டுகள் மக்களின் பண்பாடு, அரசியல், வாழ்க்கைமுறை, நீதி, சமூக உறவு, பொருளாதாரநிலை போன்றவற்றை எடுத்துரைக்கின்றன.

**உங்களுக்குத் தெரியுமா?**

### குடவோலை முறை

கிராம ஊராட்சி சபை உறுப்பினரை தேர்ந்தெடுக்க, சோழர் காலத்தில் குடவோலை தேர்தல் முறை பயன்படுத்தபட்டது. இத்தேர்தலில் குற்ற மற்றோரையும் தகுதியுள்ளோரையும் நிற்கச் செய்வார்கள். அவர்களின் பெயர்களை ஓலையில் எழுதி மக்கள் எதிரில் அவற்றைக் குடத்தில் இட்டுக் குலுக்குவார்கள். சிறுபிள்ளையைக் கொண்டு ஓர் ஓலையை எடுக்கச் செய்து அதில் வரும் பெயருடைய நபரையே தேர்ந்தெடுக்கப்பட்டவராகக் கொண்டு போட்டிப் பூசலின்றி தேர்தல் நடந்தது. இதனை, தற்கால தேர்தல் முறைக்கு முன்னோடியாகக் கருதலாம்.



Unit 1.indd 5 20-02-2020 16:40:35

பொன், செம்பு ஆகிய உலோகத்தகடுகளின் மீது எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தன அவற்றிற்குப் 'பட்டயங்கள்' என்று பெயர். பட்டயங்களும், கல்வெட்டுகளைப் போன்றே காலத்தையும் ஆட்சி முறையையும் அறிய உதவுகின்றன. பட்டயங்கள் அரசனின் பெயர், அவனது காலம், பட்டயம் அளிக்கப்படும் நோக்கம் முதலியன பற்றிக் கூறுவதால், வரலாற்றை அறிய அவை பெரிதும் துணைபுரிகின்றன.



**பட்டயங்கள்**

அவை பிராகிருதமொழியிலும் வடமொழியிலும் தமிழிலும் காணப்படுகின்றன. வேள்விக்குடிப் பட்டயம், தளவாய்புரச்செப்பேடு, சின்னமனூர்ச் சாசனம், சிவகாசிச் செப்பேடுகள் முதலிய பாண்டியர்காலப் பட்டயங்களும், திருவாலங்காட்டுப் பட்டயங்கள், கரந்தைச் செப்பேடுகள், அன்பில் பட்டயங்கள், லெய்டன் பட்டயங்கள் போன்ற சோழர்காலப் பட்டயங்களும் குறிப்பிடத்தக்கவையாகும்.

மன்னர்கள் கொடையாக வழங்கிய இறையிலி நிலங்களையும் அவற்றைப் பெற்றுக் கொண்டவர்களைப் பற்றியும் கல்வெட்டுகளும் பட்டயங்களும் கூறுகின்றன. இவை பிராமி, பிராகிருதம், தமிழ் ஆகிய மொழிகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

## நாணயங்கள்

சங்க காலத்தில் செப்பு நாணயங்கள் வழக்கில் இருந்தன. அவை சதுர வடிவமானவை. நாணயத்தின் ஒருபுறத்தில் யானையும், மறுபுறத்தில் இரட்டை மீன்களும் காணப்பட்டன. யவனர்கள் தமிழகத்தில் மதுரை, புகார் ஆகிய இடங்களிலிருந்து, தங்க நாணயங்களை வெளியிட்டனர். அவை, அவர்களுடைய புழக்கத்திற்கே பயன்பட்டன. பல்லவர் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் இரட்டை மீன், கப்பல், நந்தி போன்ற சின்னங்கள் காணப்படுகின்றன.



**பழங்கால நாணயங்கள்**

முதலாம் இராஜராஜன் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில், புலியும் அதனருகில் இரட்டை மீன் கொண்ட வடிவங்களும் காணப்படுகின்றன. இதனால், அவன் பாண்டியர்களை அடக்கி வலிமை பெற்றவனாக வாழ்ந்தான் என்பது வெளிப்படுகிறது. இரண்டாம் வரகுணனின் தங்க நாணயம், கிரந்த எழுத்தில் அவனுடைய பெயருடன் காணப்படுகின்றது. நாணயங்கள் வாயிலாக, வணிகத்தில் பண்டமாற்று முறையோடு பணப்பரிமாற்றமும் தொன்றுதொட்டுத் தமிழகத்தில் நிலவி வந்துள்ளதை அறிய முடிகிறது.



**வேலூர் கோட்டை**



Unit 1.indd 6 20-02-2020 16:40:36



**வேலூர் கோட்டை – அகழி**

## நினைவுச் சின்னங்கள்

தமிழகத்தில் காணப்படும் குகைகள், இரதங்கள், கோயில்கள், அரண்மனைகள் கோட்டைகள் போன்றவை வரலாற்றை அறிய உதவிபுரிகின்றன. மகேந்திரவர்மனின் மண்டகப்பட்டுக் கல்வெட்டில், அழியக்கூடிய பொருள்களான மரம், செங்கல், மண், சுண்ணாம்பு கொண்டு பல கோயில்கள், சங்ககாலத்திலும் அதனைத் தொடர்ந்து களப்பிரர் காலத்திலும் கட்டப்பட்டதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால், பல்லவரது காலம் முதற்கொண்டு கோயில்கள் கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டதால் அவை இன்றும் நிலைத்து நின்று,தமிழரின்பண்பாட்டைவெளிப்படுத்துகின்றன. திருப்பரங்குன்றம், மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, மாமல்லபுரம் போன்ற இடங்களில் காணப்படும் குகைக் கோயில்களும், கற்களால் அமைக்கப்பட்ட இரதங்களும் குறிப்பிடத்தக்கனவாகும். மேலும் காஞ்சியிலுள்ள கைலாசநாதர் கோயில், வரதராஜப்பெருமாள் கோயில், சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோயில், மேலும் தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம், திருவொற்றியூர், லால்குடி, திருவாரூர், மதுரை, வேலூர், இராமேஸ்வரம் மற்றும் சுசீந்திரம் போன்ற இடங்களில் காணப்படும் கோயில்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை.

## பிற ஆதாரங்கள்

முதுமக்கள் தாழிகளில் இடம்பெற்றிருந்த பல்வகைப் பொருள்கள், இறந்தவர்களுக்காகச் செய்யப்பட்ட சடங்குகளுக்கான சான்றுகளாக உள்ளன. வீரம், கொடை, புலமை முதலியவற்றில் சிறந்தவர்களை நினைவுகூரும் பொருட்டு நடப்பட்ட கற்பதுகைகளும் நடுகற்களும் தமிழ்ப் பண்பாட்டின் தொல்பொருள் சின்னங்களாக விளங்குகின்றன.



**முதுமக்கள் தாழி**

இவை தவிர குகைகள், இரதங்கள், கோயில்கள், அரண்மனைகள், கோட்டைகள் போன்றவை தமிழகப் பண்பாட்டையும், வரலாற்றையும் அறிவதற்குத் துணைபுரிகின்றன.



**பஞ்ச பாண்டவ ரதங்கள்**

திருப்பரங்குன்றம், மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, மாமல்லபுரம், சித்தன்னவாசல் போன்ற இடங்களில் குகைக்கோயில்கள் உள்ளன. மாமல்லபுர ஒற்றைக்கல் இரதங்கள், தமிழகத்தின் சிறப்பான சிற்பக்கலைக்கு அடையாளமாகத் திகழ்கின்றன. சமண முனிவர்களின் வாழ்விடங்களாகக் குகைகள் இருந்துள்ளன. தமிழகத்தின் நிலப்பரப்பு முழுவதும் பரந்து கிடக்கும் கோயில்களில் காணக்கிடைக்கின்ற சிற்பங்களும் ஓவியங்களும் கட்டடங்களும் தமிழர்தம் கலைச் சிறப்புகளைப் பறைசாற்றுவனவாக உள்ளன.

## நிலவியல் கூறுகள்

பழங்காலத் தமிழகம் வடக்கே வேங்கடம்முதல் தெற்கே குமரிவரை பரவியிருந்தது என்பதனை 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகத்து' என்ற தொல்காப்பியப் பாயிரம் உறுதி செய்கிறது. மொழியின் அடிப்படையில் இந்நாடு 'தமிழ்கூறும் நல்லுலகம்' என்றும் 'தமிழ்நாடு' என்றும் வழங்கலாயிற்று.

பண்டைய தமிழகம், மலைகளாகவும் காடுகளாகவும் சமவெளிகளாகவும் கடலை ஒட்டிய நிலப்பகுதிகளாகவும் பரந்து விரிந்து காணப்பட்டன. இவற்றைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்றும் குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்த நிலத்தை பாலை என்றும் இலக்கியங்கள் பகுத்தன.

பாண்டியநாடு, சோழநாடு, சேரநாடு, கொங்குநாடு போன்ற அரசியல் பிரிவுகளுக்கு இங்குள்ள இயற்கை அமைப்பே காரணமாக இருந்தது. மேற்குத் தொடர்ச்சி மலைகளும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் இரு கடற்கரை ஓரங்களிலும் அமைந்து, தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் ஒன்றாக இணைகின்றன. இவ்விரு தொடர்களிடையே சமவெளி ஒன்று அமைந்துள்ளது. மேற்குத் தொடருக்கு மேற்கிலும் கிழக்குத் தொடருக்குக் கீழ்ப்புறத்திலும் சமவெளிகள் உள்ளன. நீலகிரிக்குத் தெற்கிலும் சமவெளிகள் உள்ளன. இவை அன்றி, பல குன்றுகளை அடுத்தும் சமவெளிகள் அமைந்துள்ளன. இச்சமவெளியில் வாழ்ந்த மக்கள் தனித்தனியாகவே வாழ்ந்துள்ளனர்.

பாண்டியநாடு, சோழநாடு, சேரநாடு, கொங்குநாடு, தொண்டைநாடு ஆகிய நாடுகள் இவ்வாறு அமைந்தவையே ஆகும். இவையன்றிக் குறுநில மன்னர்களின் அரசுகளும் தனியரசுகளாகவே இயங்கிவந்தன. பழந்தமிழர் ஒன்றுபட்டு வாழாமல் தனித்தனி அரசியல் சமூகங்களாகப் பிரிந்து வாழ்ந்ததற்கு நாட்டின் இயற்கை அமைப்பே காரணம் என்றால் மிகையாகாது. நாட்டின் பல இடங்களில் மலைகளும் குன்றுகளும் குறுக்கிட்டதால், சங்க காலத்திலும் அதற்கு முன்பும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலப் பாகுபாடுகள் ஏற்பட்டு, அவற்றிற்கேற்ப மக்களின் ஒழுக்கமும் பண்பாடும் வாழ்க்கை முறைகளும் அமையலாயின.

## மாண்புகள்

சங்க இலக்கியங்களில், மன்னர்களுக்கும் மக்களுக்கும் உரிய ஒழுக்கங்கள் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன.

நெறிபிறழாத போர்முறை, மக்கள் நிலையறிந்து வரி விதித்தல், நேர்மையாகப் பொருளீட்டல், சான்றோர்களை மதித்தல், அவர்தம் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றுதல் முதலியன அரசர்களுக்குரிய மாண்புகளாகக் கருதப்பட்டன. இவற்றில் ஏதேனும் ஒன்றில் நெறிபிறழ்ந்தாலும் சான்றோர்கள், மன்னர்களை இடித்துரைத்து வழிப்படுத்தும் வாய்ப்பும் இருந்தது.


தனிமனித வாழ்வியல் நெறிமுறைகளும் சங்க இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன. இவ்விலக்கியங்களில் ஆண்களுக்குரிய நெறிகளும், பெண்களுக்குரிய நெறிகளும் பிரித்துச் சொல்லப்பட்டுள்ளன. 'வினையே ஆடவர்க்கு உயிரே' என்ற குறுந்தொகைத் தொடர், ஆண்களின் நிலையையும் அவர்கள் தங்களின் வாழ்விடங்களுக்குரிய தொழில்களைச் செய்தனர் என்பதையும் விளக்குகின்றது. பெண்களுக்கு உயரிய பண்பாகக் கற்பொழுக்கம் கருதப்பட்டது. மக்கட்பேறு, விருந்தோம்பல், பெரியோரை மதித்தல் முதலியன குடும்ப வாழ்க்கைக்குரிய அடிப்படைப் பண்புகளாக வரையறுக்கப்பட்டன.

## முச்சங்கங்கள்

பாண்டிய மன்னர்கள் தமிழை வளர்ப்பதற்காகப் புலவர் பலரையும் ஒருங்கிணைத்துத் தமிழ்ச்சங்கங்களை நிறுவினர். இவை, கால அடிப்படையில் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்றாக வகைப்படுத்தப்பட்டிருந்தன.



Unit 1.indd 8 20-02-2020 16:40:37




தமிழகத்தில் சமண சமயத்தைச் சார்ந்த துறவிகள், சங்கம் ஏற்படுத்திக் கல்வித் தொண்டும் சமயத் தொண்டும் புரிந்தார்கள். அச்சங்கங்களைப் போலவே, அதற்கு முந்திய காலத்திலும் சங்கம் இருந்திருக்க வேண்டும் என்றும், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலியவை அச்சங்கங்களைச் சார்ந்த புலவர்களால் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்றும் அறிஞர்கள் கருதினர்.

பழந்தமிழகத்தில் மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்தன என்றும், மதுரையிலும் கபாடபுரத்திலும் இருந்த முதல் இரண்டு சங்கங்கள் மறைந்தபிறகு, மூன்றாம் தமிழ்ச்சங்கம், மதுரையில் பாண்டியர்களின் ஆதரவோடு அமைக்கப்பட்டது என்றும், எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் மூன்றாம் தமிழ்ச்சங்ககால நூல்கள் என்றும் கூறுகின்றனர். எனவே, அவற்றைச் சங்க இலக்கியம் என்று குறிப்பிடுகின்றனர்.

மதுரையில், புலவர்கள் கூடித் தமிழை ஆய்ந்து வந்தார்கள் என்பதற்கும் பாண்டிய மன்னர்கள், அவர்களுக்கு ஆதரவளித்து வந்தார்கள் என்பதற்கும் சங்கப் பாடல்களில் சான்றுகள் உள்ளன. பாண்டியரைப் போலவே, சோழ மன்னர்களும் சேர மன்னர்களும் சிற்றரசர்களும் வள்ளல்களும் புலவர்களுக்கு ஆதரவளித்து வந்தார்கள் என்பதும் தெரிய வருகிறது. அவர்களின் உதவியும் ஆதரவும் பெற்ற புலவர்கள், தம் உள்ளத்து உணர்வுகளைப் பாடியதோடு மட்டுமல்லாமல் அவர்களின் நாடுகளையும் ஆட்சிச் சிறப்புகளையும் வாயாரப் புகழ்ந்து பாடினார்கள் என்பதும் தெளிவாகிறது. மேலும், சங்கங்களைப் பற்றிய வரலாறு, நக்கீரர் எழுதிய இறையனார் களவியல் உரையிலும் கூறப்பட்டுள்ளது.

## அகத்திணை - புறத்திணை

தமிழர்கள், தம்வாழ்க்கையை 'அகம்' எனவும் 'புறம்' எனவும் இரு கூறாகப் பிரித்தனர். இதனை, அன்பின் வழிப்பட்டது 'அகவாழ்வு' எனவும், வீரத்தின் வெளிப்பாடு 'புறவாழ்வு' எனவும் கூறுவர்.

## அகத்திணை விளக்கம்

உருவத்தாலும், அகவையாலும், அறிவாலும் ஒத்த தலைவனும் தலைவியும் சேர்ந்து வாழ்வதே அகவாழ்வாகும். தலைவனும், தலைவியும் தாம்துய்த்த இன்பம் இத்தகையது எனப் பிறருக்குப் புலப்படுத்த முடியாததே அகவாழ்வாகும். இதுவே அகத்திணையாகும்.

அகத்திணை ஐந்து வகைப்படும். அவை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்படும். பொருந்தாக் காதலைப் பெருந்திணை எனவும், ஒருதலைக் காதலைக் 'கைக்கிளை' எனவும் புற ஒழுக்கத்தை ஏழு திணைகளாகவும் கூறுவர். அகத்திணை, புறத்திணை சார்ந்த செய்திகளைத் தொல்காப்பியப் பொருளதிகாரம் விரிவாக விளக்குகிறது.

உரிப்பொருளான காதலைக் கற்பனை செய்து பாடும்போது அதற்குரிய நிலம், பொழுது, பறவை, விலங்கு, பூ, மரம் முதலான கருப்பொருள்களைப் பின்னணியாக அமைத்துப் பாடும் மரபு, நெடுங்காலமாக வழக்கத்தில் உள்ளது.



Unit 1.indd 9 20-02-2020 16:40:37

## ஐந்திணைக்கான முதற்பொருளும் உரிப்பொருளும்

| திணை | நிலம் | பொழுது | | உரிப்பொருள் |
|---|---|---|---|---|
| | | சிறுபொழுது | பெரும்பொழுது | |
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த இடமும் | யாமம் | கூதிர், முன்பனி | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடமும் | மாலை | கார் | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் | வைகறை | கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த இடமும் | எற்பாடு | கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| பாலை | மணலும் மணல் சார்ந்த இடமும் | நண்பகல் | இளவேனில், முதுவேனில், பின்பனி | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

### புறத்திணை விளக்கம்

புறத்தார் யாவருக்கும் புலப்படும் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுவது புறத்திணை எனப்படும். தொல்காப்பியம் புறத்திணைகளை ஏழு எனப் பகுக்க, புறப்பொருள் வெண்பாமாலை பன்னிரண்டாகப் பகுத்துள்ளது. வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை ஆகிய எட்டுப் புறத்திணைகள் போருக்கான காரணங்களையும் போர் நடைபெறும் முறைகளையும் கூறுகின்றன. மன்னனின் வீரம், கொடை, புகழ் முதலானவற்றைச் சிறப்பித்துப் பாடுவது 'பாடாண்திணை' ஆகும். மேற்கண்ட ஒன்பது திணைகளில் கூறாதனவற்றைப் 'பொதுவியல் திணையில்' அடக்கிக் கூறுவர்.

### விருந்தோம்பல்

'விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே (தொல்.பொருள். 540) என்ற தொல்காப்பிய நூற்பாவில் இடம்பெற்றுள்ள 'விருந்து' என்னும் சொல் 'புதியது' என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. எனவே, இதன் அடிப்படையில் தோன்றிய 'விருந்தினர்' என்ற சொல்லும் அறிந்தவர், தெரிந்தவராகிய சுற்றத்தார் அல்லது முன்பின் அறியாதவர்கள், வீடு தேடி வருவோரையும் குறிப்பதாகும். இவர்களை வரவேற்று உணவளித்து உபசரிக்கும் பண்பே விருந்தோம்பலாகும். பசியென வந்தவர்களை வரவேற்று இன்முகத்தோடு உணவளித்த சிறப்பு, நம் தமிழர்களையே சாரும். தொல்காப்பியக் காலம் முதல் இப்பழக்கம் தமிழர்களிடையே இருந்து வருகிறது.

விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா
மருந்துஎனினும் வேண்டற்பாற் றன்று (குறள் 82)

என்னும் குறட்பா இக்கூற்றை விளக்குகிறது. இளங்கோவடிகள் 'தொல்லோர் சிறப்பின்' என்று விருந்துக்கு அடை கொடுத்துக் கூறியதால், தமிழரின் தொன்மையான பழக்கம் விருந்தோம்பல் என்பதை அறியலாம்.



Unit 1.indd 10 20-02-2020 16:40:37



விருந்தோம்பல்

விருந்தோம்பும் பண்பு கணவன், மனைவியின் தலையாய கடமை எனச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. நெடும்பயணம் மேற்கொள்பவர்களால் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களை உடன்கொண்டு செல்வது என்பது இயலாத செயல். அவ்வாறு உணவின்றிப் பயணம் மேற்கொண்டு வருபவர்களுக்கு வழியிலுள்ள வீடுகளில் உள்ளோர் உணவளிப்பர். சங்க காலத் தமிழர்கள் பசியென்று வருபவர்களை வரவேற்க, வீட்டு வாயிலில் காத்திருப்பர். இரவில் வாயில் கதவை அடைக்கும்முன் விருந்தினர் யாரேனும் உள்ளனரா எனப் பார்ப்பர், அவ்வாறு இருப்பின் வரவேற்று உணவளிப்பர் என்பதை நற்றிணைப் பாடல் மூலம் அறியலாம்.

…. …. …. ………… …… …. …கோவலர்
மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளிச்
செவிஅடை தீரத் தேக்கிலைப் பகுக்கும்
புல்லி நல்நாட்டு (அகம் 311, 9 – 12)

விருந்தினர் இரவில் காலம் கழித்து வரினும் மனம் மகிழ்ந்து விருந்தோம்பினர். இரவில் வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு நெய் கலந்த இறைச்சியைச் சமைத்துக் கொடுப்பது அன்றைய வழக்கமாகும். பசி என்று வந்தவர்களை வெளியே நிற்க வைத்துவிட்டுத் தாம் மட்டும் உணவு உண்பதை விரும்ப மாட்டார்கள். இதனையே, விருந்தோம்பல் முறை என்று தமிழர்கள் வகுத்திருந்தனர். விருந்தினரிடம் முகமலர்ச்சியோடு கூடிய இனிய சொற்களைக் கூறி, கண்ணில் காணும்படி தமக்கு நெருக்கமாக இருக்கச் செய்து, கன்று ஈன்ற பசுவைப் போல அன்புகாட்டி நெகிழச் செய்வர்; விருந்தினர் மனம் மகிழும்படி விண்மீன்கள் போன்ற ஒளிவீசும் கிண்ணங்களில் பல வகையான உணவினைப் படைப்பர்.

தமிழர்கள், தமது வீட்டிற்கு வருபவர்களுக்கு உணவளித்த பிறகே, தாம் உண்ணும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். ஒருநாள் சென்றாலும், இருநாள் சென்றாலும் பலநாள் பலரோடு சென்றாலும் முதல் நாள் போன்றே இன்முகத்துடன் வரவேற்று விருந்தோம்பினர் என்பதை ஔவையார் பாடல் மூலம் அறியலாம். ஆயர்கள், மாடு மேய்க்கப் புறப்படும்போது உணவினை மூங்கில் குழாயில் இட்டு, மாட்டின் கழுத்தில் கட்டுவர். காட்டுவழியே செல்லும்போது, அவ்வழியாகப் பசியோடு வருபவர்களுக்குத் தாம் வைத்திருக்கும் உணவினைப் பகிர்ந்து கொடுப்பர்.

பழந்தமிழ் இலக்கியத்தில் உணவு சமைக்கும் முறைகளை 'மடைநூல்' குறிப்பிடுகிறது. உணவுப் பற்றிய செய்திகள் சிறுபாணாற்றுப்படை, பெருங்கதை, மணிமேகலை போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளன. காலத்திற்கும், நிலத்துக்கும் ஏற்ற உணவுகளை அந்நூல்கள் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

## வள்ளன்மை

பெற்ற பெருவளத்தைத் தக்கோர்க்குப் பகிர்ந்தளிப்பதே வள்ளன்மையாகும். இப்பண்பு, அரசர்கள் பின்பற்ற வேண்டிய பண்புகளுள் தலையாயது எனக் கருதப்பட்டது. கல்வி, தறுகண், இசை, கொடை ஆகிய பெருமிதப் பண்புகளுள் ஒன்றாக வள்ளல் தன்மை விளங்குகிறது.

சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தர்களும் குறுநில மன்னர்களாகிய கடையெழு வள்ளல்களும் வாரி வழங்கும் வள்ளல்தன்மை கொண்டவர்களாக விளங்கினர் என்பதை இலக்கியங்கள் பெருமிதத்துடன் கூறுகின்றன.



Unit 1.indd 11 20-02-2020 16:40:37



பேகன்



பாரி

### கடையெழு வள்ளல்கள்

| குறுநில மன்னர்கள் | ஆட்சி செய்த பகுதி | வள்ளல் தன்மை |
|---|---|---|
| பேகன் | பழனிமலை | மயிலுக்குப் போர்வை தந்தவர் |
| பாரி | பறம்புமலை | முல்லைக் கொடி படர்வதற்குத் தம் தேரையே தந்தவர் |
| திருமுடிக்காரி | மலையமா நாடு | குதிரைகளைப் பரிசாக வழங்கியவர். |
| ஆய் அண்டிரன் | பொதிய மலை | நீல நாகத்தின் உடையை இறைவனுக்குப் போர்த்தி மகிழ்ந்தவர். |
| அதியமான் | தகடூர் | அரிய நெல்லிக்கனியை ஔவைக்கு ஈந்தவர். |
| நள்ளி | கண்டீர மலை | மலைவாழ் மக்களுக்கு அனைத்துப் பொருள்களையும் வழங்கியவர். |
| வல்வில் ஓரி | கொல்லிமலை | யாழ் மீட்டும் பாணர்களுக்குப் பரிசு வழங்கியவர். |

### இந்தியப் பண்பாட்டிற்கு தமிழகத்தின் கொடை

தமிழர்கள் மிகச் சிறந்த பண்பாட்டையும், நாகரிகத்தையும் உடையவர்கள். இதனை உலக வரலாற்று ஆசிரியர்கள் ஒருமனதாக ஏற்றுக் கொள்கின்றனர். தமிழர்கள் இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு வழங்கியுள்ள கொடை அளவிடற்கரியது.

### மொழிக்கொடை

மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே திராவிடர்கள் மிக உயர்ந்த நாகரிகத்துடன் வாழ்ந்ததை அறிகிறோம். வடநாட்டு மொழிகள் பலவற்றிலும், தென்னாட்டு மொழிகள் அனைத்திலும் தமிழ்ச்சொற்களை இன்றும் காணமுடிகிறது. இந்தியாவிற்கு வெளியே கடல்கடந்த நாடுகளிலெல்லாம், இந்திய நாகரிகத்தோடு பரவியுள்ள மொழி தமிழ்மொழியே



Unit 1.indd 12 20-02-2020 16:40:38

என்பது உலகறிந்த உண்மை. வேதகாலத்திலேயே சமஸ்கிருதத்தில் தமிழ்ச் சொற்கள் கலந்திருந்தன என்பதையும் அறியமுடிகிறது.

## திருக்கோயில்கள்

சமயப் பண்பாட்டு வளர்ச்சிகளை எடுத்துகாட்டும் அழகிய சின்னங்கள் தமிழகத்தின் வானுயர்ந்த திருக்கோயில்களாகும். திருக்கோயில்கள் பழங்காலத்தில் பண்பாட்டு மையங்களாகவும் கலைக் கூடங்களாகவும் திகழ்ந்தன. இக்கோயிலில் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலைகள் நிறைந்துள்ளன.

பாண்டிய, பல்லவ, சோழ, விஜயநகர மன்னர்கள் காலத்தில் இக்கலைகள் பெரிதும் போற்றப்பட்டு எண்ணற்ற கோயில்கள் எழுந்தன. இவையனைத்தும் தமிழகம் இந்தியாவிற்கு வழங்கிய கொடை எனலாம். இதே அமைப்பில் வடஇந்தியாவில் பலகோயில்கள் எழுந்துள்ளதையும் காணலாம். தமிழகக் கலைப் பாரம்பரியம் உலகமே வியந்து பாராட்டும் வகையில் அமையப்பெற்றுள்ளது. சமயங்களைச் சார்ந்த பள்ளிகளும், கோயில்களும், குடைவரைக் கோயில்களையும் தமிழகமெங்கும் காணமுடிகிறது. திருச்சி, தஞ்சை, திருவானைக்காவல், சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர், தென்காசி, காஞ்சி, சுசீந்தரம், திருவரங்கம், திருக்கழுக்குன்றம், குடந்தை, கன்னியாகுமரி, இராமேஸ்வரம் போன்ற இடங்களில் மிகச்சிறப்பு வாய்ந்த இந்து சமயக்கோயில்களைக் காணலாம்.

## கோயில்களின் சிறப்பு

மனிதனை விலங்கு நிலையிலிருந்து உயர்த்த கோயில்களில் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன. தமிழர் பண்பாட்டை விளக்கும் நிகழ்ச்சிகள் கோயில்களில் நடைபெற்றதால், கோயில்கள் பண்பாட்டு மையங்களாகத் திகழ்கின்றன.

மனிதன் தன் நிலையில் உயர, சமுதாயப் பணி செய்ய, தியாக உணர்வு பெற பக்தியும், அன்பும் அவசியம் என உணர்ந்தவர்கள் சிறந்த வழிபாட்டுமுறையை பின்பற்றினர்.

வயது என்பது உயிரோடு கூடிய உடலுக்கு உண்டு என்றும் ஆன்மாவிற்கு இல்லை என்றும் ஆன்மா தான் எதிலிருந்து வந்ததோ அதிலே சேர முயன்று வருதலை **'லயமாகுதல்'** என்பர். இவ்விடங்கள் பெரும்பாலும் கோயிலாகவே இருந்தன. ஆதலால் கோயில்கள், ஆன்மா லயமாகுமிடங்களாகத் திகழ்கின்றன. எனவே கோயில்களை ஆலயங்கள் எனவும் அழைத்தனர்.

கோயில்களில் கலைகள் வளர்ந்து சிறந்ததாலும் மக்கள் அவற்றைக் கண்டு மகிழ்ந்ததாலும் கோயில்கள் நுண்கலைகள் வளருகின்ற இடமாகத் திகழ்கின்றன. தேவார, திருவாசகப் பாடல்கள் சிவன் கோயில்களிலும், நாலாயிரத்திவ்விய பிரபந்தம் வைணவக் கோயில்களிலும் பாடப்பெற்றன. கோயில் திருமுறைகள் வளருமிடமாக இருந்தன.

மழை, புயல், வெள்ளம் போன்ற காலங்களில் மக்களுக்குப் புகலிடமாகத் திகழ்ந்தவை திருக்கோயில்களாகும். மேலும் திருமணம், விழாக்கள் போன்றவை கோயில்களின் மண்டபங்களில் நடைபெற்று வந்தன. எனவே கோயில்கள் சமுதாய புகலிடமாகவும், ஊர்ப்பணி மன்றங்களாகவும் இருந்தன என்பதை அறியமுடிகிறது.

தமிழர் வாழ்வு கோயிலோடு இணைந்ததாகவே அமைந்திருந்தது. ஔவையார், 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றார். 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது பழமொழி. இக்கோயில்கள் வாயிலாக ஆன்மிகம் வளர்ந்து மக்களிடையே ஒற்றுமை ஓங்கி, மனித நேயம் மலரும் இடமாகத் திருக்கோயில்கள் திகழ்ந்தன என்பதை அறிகிறோம்.

## சிற்பம்

தமிழ்நாட்டின் திருக்கோயில்கள் சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. இறைவன் இறைவி திருமேனிகள், தூண்களில் வடிக்கப்பட்டுள்ள சிற்பங்கள், கோபுரங்களில் அமைக்கப்பட்டுள்ள சுதை சிற்பங்கள் அனைத்தும் அற்புதமாக வடிவமைக்கப்பட்டவையாகும். புராண, இதிகாசக் கதைக்காட்சிகளை விளக்கும் சிற்பங்களும் இடம்பெற்றுள்ளன. பஞ்ச உலோகங்களால் வடிவமைக்கப்பட்ட இறைவன்


Unit 1.indd 13 20-02-2020 16:40:38

திருமேனிகள் இன்றும் தமிழ்நாட்டில் இருந்து உலகின் பல நாடுகளுக்கும் அனுப்பப்படுவதைக் காணும்போது, பண்டைத் தமிழர் சிற்பக்கலை நுணுக்கங்களை வருங்காலச் சந்ததியினருக்கு விட்டுச் சென்றுள்ள மிகப் பெரிய பொக்கிஷமாகும் என்பதை அறிய முடிகிறது.

## ஓவியம்

மொழி தோன்றுவதற்கு முன்பே ஓவியம் தோன்றியது எனலாம். ஓவிய எழுத்துக்கள் இன்றும் மொழி எழுத்துகளாகப் பயன்படுத்தப்படுவதை ஜப்பான், சீன மொழிகளில் காணலாம். பண்டைத் தமிழர்கள் கற்பாறைகளிலும் கோயில்களிலும் ஓவியங்களை வரைந்து வளர்த்தனர். வண்ணம் தீட்டப்பெற்ற ஓவியங்கள் கோயில் சுவற்றிலும், மேல் கூரை விதானங்களிலும் வரைந்திருந்தனர். இதன் வாயிலாக இதிகாச, புராணக்காட்சிகள் ஓவியங்களாக விளக்கப்பட்டுள்ளன. தஞ்சைப் பெரிய கோயிலில் இராசராச சோழனின் வரலாற்று நாடகக்காட்சிகள் இன்றும் இருப்பதைக் காண முடிகிறது. இவ்வண்ணக் கலவைகள் காலவெள்ளத்தால் அழியா வண்ணமும், மாறா வண்ணமும் தீட்டப்பெற்றிருக்கும் விந்தை இன்றும் போற்றுதற்குரியது.

## நாட்டியம்

பண்டைத் தமிழர்கள் நாட்டியக் கலையில் சிறந்து விளங்கினர். நாட்டியம் என்பது இசையோடு கூடிய கூத்து ஆகும். சிலப்பதிகாரம் கூத்து வகைள் பற்றி இயம்புகிறது. கட்புலனாகும் இன்பத்தைத் தருவது ஆடற்கலை. உடல்சோர்வு,மனச்சோர்வையும் நீக்கும் வடிகால் ஆடலும், பாடலும் என்றால் மிகையாகாது. பண்டைக்காலத்தே ஆடல்நிகழ்வதற்கு அரங்குகள் இருந்தன. மரநிழல்களிலும் தெருக்களிலும், கோயில் முற்றத்திலும், மாடமாளிகைகளிலும், மண்டபங்களிலும் மகளிர் சிலம்பொலிக்க ஆடினர். “கை வழிக்கண்களும் கண்வழி மனமும் செல்ல ஆடுதலே” ஆடலின் நுட்பமாகும்.

ஆடவல்ல நடனமகள் ‘விறலி’ என்றழைக்கப்பட்டாள். நடன மகன் ‘கூத்தன்’ என்றழைக்கப்பட்டான். வள்ளிக் கூத்து, முருகனை வழிபட்டு ஆடும் ‘குன்றக்குரவை’, திருமாலை வழிபட்டு ஆடும் ‘ஆய்ச்சியர் குரவை’ பெண்கள் கைகோத்தாடும் குரவைக் கூத்து, துணுங்கைக் கூத்து, குணலைக் கூத்து போன்றவை இலக்கியங்களில் காணப்படும் கூத்து வகைகளாகும். சிவன் ஆடுகின்ற கூத்து ‘தாண்டவம்’ எனப்படும். சைவப்பெருமக்கள் இறைவனை ஆடும் கடவுளாக, அம்பலக் கூத்தனாக, ஆடல் வல்லானாக, நடராசனாகப் போற்றி வணங்கினர். வைணவப் பெருமக்களும் திருமாலை குழலூதிக் கோபியருடன் ஆடும் கண்ணனாகப் போற்றினர்.

தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் நடனமாந்தர்கள் பலர் நாட்டிய நிகழ்ச்சிகளை நிகழ்த்தியிருக்கிறார்கள். இவர்கள் இறைவனின் திருவிளையாடற் காட்சிகளை நாட்டியமாடி மக்களை பக்திப் பரவசப்படுத்தியிருக்கிறார்கள் என்பதும் கல்வெட்டுகள் வாயிலாக அறியமுடிகிறது. இந்நடன மாந்தர்களின் நடனக்காட்சிகள் கோயில்களில் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இறைவனையும் ஆடல் அரசனாகப் பார்த்தது நம் தமிழர் சமுதாயம். காலைத் தூக்கி நின்றாடும் நடராசர் திருமேனி நடனக்கலைக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்தியப் பெருநாட்டிற்கு தமிழகப் பரதக்கலை ஒரு சிறந்த கொடை என்றால் மிகையாகாது.

## விழாக்கள்

தமிழ் மக்கள் உழைப்பையே செல்வமாக கொண்டு வாழ்ந்தனர். திரை கடலோடியும் திரவியம் தேடிப் பொருள்வளம் பெருக்கினர். மகிழ்ச்சி நிறைந்த மக்கள் வாழ்வில் விழாக்களுக்குப் பஞ்சமில்லை. தம்நிலத் தெய்வங்களை வணங்கி ஆண்டுதோறும் விழாக்கள் கொண்டாடினர். உயிர்த்தொழிலாம் உழவுத்தொழில் செய்து மகிழ்ந்தனர். பயிர் வளர்வதற்கும் மழைக்கும் காரணமான சூரியனை வணங்கி பொங்கல் விழா எடுத்தனர்.

தமிழர் பொங்கல் விழா வட இந்தியாவில் மகரசங்கராந்தியாகக் கொண்டாடப்படுகிறது. இந்திய பெருநாட்டுக்குத் தமிழரது வழிபாட்டுமுறையே வழிகாட்டியாக இருந்தது. வேளாண்மை செழிக்க உதவிய காவிரியாற்றுக்கு ஆடிமாதம் 18-ஆம் நாள் ஆடிப்பெருக்காக கொண்டாடி நாடும் வீடும் சிறக்க அருளுமாறு வேண்டி வழிபடுகின்றனர்.



Unit 1.indd 14 20-02-2020 16:40:38

## கிராமிய விளையாட்டு

பண்டையத் தமிழர்களிடையே வீரமும் விளையாட்டும் இணைந்தே இருந்தன. மற்போரும், விற்போரும்வீரவிளையாட்டாகவேதிகழ்ந்தன.இது தவிர பெண் குழந்தைகளுக்கு அம்மானை, ஊசல் போன்றவையும், ஆண் குழந்தைகளுக்கு சிற்றில், சிறுபறை, சிறுதேர் போன்றவை விளையாட்டாக இருந்ததை அறியமுடிகிறது. தமிழர் கூடிச் சேர்ந்து விளையாடும் விளையாட்டுக்கள் மூலம் ஒற்றுமையும், கூடி வாழும் ஆர்வமும் பெருகி நாட்டுப்பற்றையும் மொழிப்பற்றையும் வளர்த்தது எனலாம்.

## ஜல்லிக்கட்டு

பண்டையத் தமிழரின் வீரவிளையாட்டில் ஜல்லிக்கட்டும் ஒன்று. இதை சங்க காலத்தில் 'ஏறுதழுவல்' என்பர். அடக்கமுடியாத காளைகளை அடக்கிப் பரிசாகப் பெண்களை மணப்பர் பண்டைத் தமிழர்கள். இவ்விழாவே தற்போதும் காணும் பொங்கலன்று தமிழகத்தில் ஜல்லிக்கட்டாக நடைபெறுகிறது.

## இந்திர விழா

மருத நிலக்கடவுள் இந்திரன். இந்திரனை வழிபட்ட மக்கள், இந்திரன் கேளிக்கைகளில் மகிழ்ந்திருப்பதைப் போலவே தாங்களும், மகிழ்ந்திருக்க விரும்பி, வசந்த காலத்தின் – முழு நிலா நாளை இந்திர விழாவாகக் கொண்டாடி மகிழ்வர். இந்நாளில் பொருள் படைத்தோர், உணவும், பொருளும் அளித்து மகிழ்வர். பல மேடைகளில் இசையும், கூத்தும் நடைபெறும். இவ்விழா சங்ககாலத்தில் சிறந்திருந்தது என்பதை சிலப்பதிகாரம் வாயிலாக அறிகிறோம்.

## பிற கொடைகள்

- **திருக்குறள்:** உலகப்பொதுமறையாம் திருக்குறள் தமிழர்களின் கொடையாகும்.
- **மருத்துவம்:** சித்த மருத்துவம் என்னும் மூலிகை மருத்துவத்தை உலகிற்கு வழங்கியவர்கள் தமிழர்கள்.
- **இசை:** தமிழிசை தமிழர்களின் பண்பட்ட உணர்விற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.
- **கப்பல் கட்டுமானம்:** பன்னெடுங்காலத்திற்கு முன்னரே கப்பல் கட்டுமானத்தையும், தொழில் நுட்பத்தையும் அறிந்திருந்தனர்.
- **விருந்தோம்பல்:** பழந்தமிழர் விருந்தினரை வரவேற்று உபசரிப்பதில் பெருமகிழ்ச்சி அடைந்தனர்.
- **நட்பு:** பழந்தமிழ் நட்பினை உயிரினும் மேலானதாய் மதித்துப் போற்றினர். உணர்ச்சியொத்து பழகுதலே நட்பு என்றனர்.
- **காதல்:** தமிழர் காதல் என்னும் சொல்லை அன்பு செலுத்துதல் என்ற நிலைகளில் பயன்படுத்தினர்.
- **வீரம்:** பண்டைத் தமிழரின் வாழ்வு முறையே, அவர்களது வீரம் செறிந்த வாழ்வு முறை எனலாம்.
- **மானம்:** "மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமான்" என்று தமிழர்கள் மானத்தை உயிரினும் மேலானதாக போற்றினர்.
- **கற்பு:** கடவுள் நெறிக்கு மேலானதாக பெண்கள் கற்பு நெறியில் வாழ்ந்து அழியாப் புகழ் பெற்றனர். இக்கற்புடைமையே தமிழரின் உயரிய ஒழுக்க நெறியாகும்.
- **பரதம்:** தமிழ்நாட்டின் மிகத் தொன்மையான கலை பரத நாட்டியமாகும். இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் தற்போதும் சிறப்புற்று விளங்குகிறது. நாட்டிய கலைஞரின் முகபாவனையில் நவரசங்களின் வெளிப் பாட்டைக் கொண்டுவருவதைக் காணலாம்.

**உங்களுக்குத் தெரியுமா?**

**ஹஸ்தம்**

பரத நாட்டியத்தில் ஒரு முக்கிய கூறான கை அசைவுகளை சமஸ்கிருதத்தில் ஹஸ்தம் என அழைப்பர். கை என்பதன் சமஸ்கிருத சொல்லே ஹஸ்தம் எனப்படுகிறது. இதை தமிழில் முத்திரை என்பர். பரத நாட்டியத்தில் அடவு, அபிநயம் இரண்டிற்கும் முக்கியமானது முத்திரைகளாகும். கைவிரல்களின் பல்வேறு நிலைகளாலும் அசைவுகளினாலும் பொருள் படவும், அழகிற்காகவும் அபிநயத்தையே கைமுத்திரை அல்லது ஹஸ்தம் எனலாம். பரதத்தில் அபிநயத்திற்காக பயன்படும் கை அசைவுகளை ஒற்றைக்கை (இணையாக்கை) இரட்டைக்கை (இணைந்தகை) என இரண்டாக பயன்படுத்துகின்றனர். இவைத் தவிர அபூர்வ முத்திரைகளும் உண்டு.



Unit 1.indd 15 20-02-2020 16:40:38

❖ **மண்டபங்கள்:** நூற்றுக்கால் மண்டபங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள், இசைத்தூண்கள் போன்றவை தமிழர்களின் கொடையாகும்.

இவ்வாறு பண்டையத் தமிழர்கள், இந்தியப் பெருநாட்டிற்கு வழங்கிய அளவற்ற பண்பாட்டுக் கொடையை அறிய முடிகிறது.

## நிறைவுரை

சங்க இலக்கியங்கள் அகவாழ்க்கையை அன்பின் ஐந்திணையாகப் பகுத்துக் காண்கின்றன. தமிழரின் வழிபடு தெய்வம், வழிபாட்டு முறைகள் ஆகியனவும் விளக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம் தமிழர் வாழ்வியலின் ஆட்சிமுறை, வணிகச் சிறப்பு, சமய நம்பிக்கை, தனிமனித ஒழுக்கம் ஆகியவற்றை விரிவாகக் கூறும் வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது.

வெளிநாட்டவர்களின் குறிப்புகளிலிருந்து தமிழர்கள், மேலை நாடுகளுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பு பல சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் உரிய தனிமனித வாழ்வியல் நெறிகள் பகுத்துக் கூறப்பட்டுள்ளன. தமிழரின் விருந்தோம்பல் பண்பையும் கடையெழு வள்ளல்களின் வள்ளல் தன்மையையும் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளமையை அறிய முடிகிறது.

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. 'பண்பாடு' என்ற சொல்லைத் தமிழில் முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் --------

   அ) இளங்கோவடிகள் ஆ) டி.கே. சிதம்பரநாதனார்
   இ) தொல்காப்பியர் ஈ) வ.உ.சிதம்பரனார்

2. கீழ்க்காண்பனவற்றுள் பொருந்தாத இணையைக் கண்டறிக.

| நிலம் | – | சிறுபொழுது |
|---|---|---|
| அ) குறிஞ்சி | - | யாமம் |
| ஆ) முல்லை | - | மாலை |
| இ) மருதம் | - | வைகறை |
| ஈ) பாலை | - | எற்பாடு |

AAYVFF

3. கீழ்க்காண்பனவற்றுள் சரியாகப் பொருந்தியுள்ள இணையைத் தேர்ந்தெடுக்க.

| | | |
|---|---|---|
| அ) பாரி | - | முல்லைக்குத் தேர் ஈந்தவர் |
| ஆ) பேகன் | - | ஔவைக்கு நெல்லிக்கனி அளித்தவர் |
| இ) ஆய் அண்டிரன் | - | மயிலுக்குப் போர்வை தந்தவர் |
| ஈ) அதியமான் | - | நீல நாகத்தின் ஆடையை இறைவனுக்கு அணிவித்தவர் |

4. பொருத்துக

| | |
|---|---|
| அ) தொண்டி | - 1. முஸிரிஸ் |
| ஆ) முசிறி | - 2. கொமாரி |
| இ) பொற்காடு | - 3. திண்டிஸ் |
| ஈ) குமரி | - 4. பகரி |



Unit 1.indd 16 20-02-2020 16:40:39

அ) அ-3 ஆ-2 இ-1 ஈ-4 ஆ) அ-3 ஆ-1 இ-4 ஈ-2
இ) அ-4 ஆ-1 இ-2 ஈ-3 ஈ) அ-2 ஆ-3 இ-4 ஈ-1

5. கி.மு.(பொ.ஆ.மு) ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற கிரேக்க மருத்துவர்
அ) ஜி.யு. போப் ஆ) ஸ்டிராபோ
இ) அகஸ்டின் ஈ) ஹிப்பாகிரேட்டஸ்

6. 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்'- இப்பாடலடி இடம்பெற்றுள்ள நூல் -----
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) கலித்தொகை ஈ) அகநானூறு

7. பின்வரும் கூற்றையும், அதன் காரணத்தையும் படித்து விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.
கூற்று: "உலகம் என்பது, உயர்ந்தோர் மேற்றே" எனத் தொல்காப்பியம் கூறுகிறது.
காரணம்: நல்ல வழிமுறைகளைப் பின்பற்றிப் பண்பாட்டில் சிறந்து விளங்குபவர்களே உயர்ந்தவர்கள்.
அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று சரி, காரணமும் சரி
இ) கூற்று தவறு, காரணமும் தவறு ஈ ) கூற்று தவறு, காரணம் சரி

8. பத்துப்பாட்டிலுள்ள ஆற்றுப்படை நூல்களின் எண்ணிக்கை
அ) 5 ஆ) 7 இ) 9 ஈ)10

9. பொன், செம்பு ஆகிய உலோகங்கள் மீது பொறிக்கப்படுகின்ற எழுத்துகள் --------------
அ) ஓலைச்சுவடிகள் ஆ) பட்டயங்கள் இ) செப்பேடுகள் ஈ) சாசனங்கள்

10. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.
1) தொல்காப்பியம் கூறும் புறத்திணைகளின் எண்ணிக்கை பன்னிரண்டு.
2) புறத்தார் யாவருக்கும் புலப்படும் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுவது புறத்திணை.
3) மன்னனின் வீரம், கொடை, புகழ் முதலியவற்றைச் சிறப்பித்துப்பாடுவது வாகைத்திணை
4) பொருந்தாக் காதலைப் பெருந்திணை என்று கூறுவர்.
அ) 2, 4 சரி ஆ) 1, 3சரி இ) 2, 3சரி ஈ) அனைத்தும் சரி

11. சோழர்காலக் கிராம ஆட்சிமுறையைப் பற்றி அறிய உதவும் கல்வெட்டு
அ) மண்டகப்பட்டு ஆ) தளவானூர் இ) மாமண்டூர் ஈ) உத்திரமேரூர்

## குறுவினா

1. பண்பாட்டை வெளிப்படுத்தும் கூறுகள் யாவை?
2. அன்பின் ஐந்திணை – குறிப்பு வரைக.
3. தொல்பொருள் சான்றுகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
4. பழந்தமிழகத்தின் நிலவியல் கூறுகள் யாவை?
5. புறப்பொருள் வெண்பாமாலை கூறும் புறத்திணைகள் யாவை?
6. கல்வெட்டு என்றால் என்ன?
7. பட்டயங்கள் – குறிப்பு வரைக.
8. அகத்திணைகள் என்றால் என்ன?
9. இலக்கியங்களில் காணப்படும் கூத்து வகைகள் யாவை?



Unit 1.indd 17 20-02-2020 16:40:39

### சிறுவினா

1. சிலப்பதிகாரம் எவ்வாறு வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது?
2. பண்பாடு சொற்பொருள் விளக்கம் தருக.
3. பண்டைய தமிழரின் வணிகத்தை அறிய உதவும் சான்றுகள் யாவை?
4. தமிழகம் எந்தெந்த நாடுகளிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்தது?
5. கடையெழு வள்ளல்கள் யாவர்?
6. சங்ககால மன்னர்களின் மாண்புகளாகக் கருதப்படுவன யாவை?
7. வள்ளன்மை – குறிப்புவரைக.

### நெடுவினா


1. பண்டைய தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்பினை இலக்கியச் சான்றுகளின் வழி விளக்குக.
2. தமிழகப் பண்பாட்டினை அறிய வெளிநாட்டவரின் குறிப்புகள் எங்ஙனம் உதவுகின்றன என்பதை விளக்குக.
3. தமிழரின் விருந்தோம்பல் பண்பினை விளக்குக.
4. தமிழர்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் காலக்கண்ணாடி கல்வெட்டுகளும் பட்டயங்களும் என்பதை நிறுவுக.
5. முச்சங்கங்கள் பற்றி விவரிக்க.
6. இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழகத்தின் கொடைகள் யாவை?



Unit 1.indd 18 20-02-2020 16:40:39

## இணையச்செயல்பாடு

# தமிழ்ப் பண்பாடு



தமிழ்ப் பண்பாடு அறிவோமா !

### படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி tamilvu என்னும் இணையப்பக்கத்திற்குச் செல்க.
- திரையின் இடப்பக்கத்தில் பண்பாடு ஒரு விளக்கம், மொழியும் பண்பாடும், பண்பாட்டு வரலாற்றுச் சான்றுகள், தமிழர் பண்பாட்டு அடிப்படைகள் போன்ற தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றுள் தேவையானதைத் தேர்வு செய்து அதன் விளக்கங்களை அறிக.

  எடுத்துக்காட்டாக, தமிழர் பண்பாட்டு அடிப்படைகள் என்பதைத் தேர்வு செய்து, கீழ்ப்பகுதியில் உள்ள பாடஅமைப்பைச் சொடுக்கியதும் தமிழரின் புகழ், வீரம், விருந்தோம்பல் போன்றவை தோன்றும். அவற்றை அறிந்துகொள்க.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :







தமிழ்ப் பண்பாடு இணையப்பக்கத்தின் உரலி

*http://www.tamilvu.org/ta/courses-degree-c031-c0311-html-c03114l5-17073#451*

B148_11_EIC_TM

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



Unit 1.indd 19 20-02-2020 16:40:40

## இணையச்செயல்பாடு

# தொல்பொருள் சான்றுகள்

கல்லில் புதைந்திருக்கும் வரலாற்றைக் கண்டறிவோமா!





### படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி tamildigitallibrary என்னும் இணையப்பக்கத்திற்குச் செல்க.
- பழங்கால வட்டெழுத்து முறைகளும் அவை இடம்பெற்றுள்ள கல்வெட்டுகளும் திரையில் தோன்றும்.
- கல்வெட்டு உள்ள இடங்களைச் சொடுக்கி, அவற்றின் வரலாற்றைத் தெரிந்து கொள்க.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :







தொல்பொருள் சான்றுகள் இணையப்பக்கத்தின் உரலி

*http://tamildigitallibrary.in/inscriptions-listing?id=jZY9lup2kZl6TuXGlZQdjZh8&cat_id=jZY9lup2kZl6TuXGlZQdjZp1*

B148_11_EIC_TM

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



Unit 1.indd 20 20-02-2020 16:40:42